1. "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனக் கூறியவர் யார்? அவருடைய காலம் யாது?

A) ஞான சம்மந்தர் - 9ம் நூற்றாண்டு

B) நாவுக்கரசர் - 9ம் நூற்றாண்டு

C) சுந்தரர் - 9ம் நூற்றாண்டு

D) நாவுக்கரசர் - 7ம் நூற்றாண்டு

2. I. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" - ஔவையார்

II. "தெய்வச் சிதம்பரத் தேவாவின் சிந்தந் திரும்பி விட்டாற்
போய்வைத்த சொப்பனமாம் மன்னர் வாழ்வும்" பட்டினத்தார்

A) I, II சரி B) I சரி II தவறு C) I தவறு II சரி D) I, II தவறு

3. பொருளுணர்ந்து பொருத்துக:

A) ஐயை - 1. உவும்உருபு

B) மல்குதல் - 2. தாய்

C) மருவு - 3. நிறைதல்

D) மருள் - 4. பொருந்திய

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 2 | 3 | 4 | 1 |

4. "ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்" - அடிக்கோட்ட சொல்லின் பொருள் அல்லாதது எது?

A) கடல் B) ஆழி C) மழை D) சமுத்திரம்

5. யானையைக் கொல்லாமலே யானைக் காலிலிருந்து முதியவனைக் காப்பாற்றியவன்

A) கண்ணன் B) சீவகன் C) கோவலன் D) செங்குட்டுவன்

6. I. அங்கங்களையும் காட்சிகளையும் வைத்து எழுதுவது நாடக நன்னூல் மரபு

II. மனோன்மணியம் 20 அங்கங்களையும் 5 காட்சிகளையும் கொண்டது

A) I, II சரி B) I சரி II தவறு C) I தவறு II சரி D) I, II தவறு

7. சரியான பொருள் தரும் இணையைத் தேர்க :

A) ஏகன் - தற்பரன் B) இறைவன் - திருமால்

C) இறைவன் - இறைவன் D) ஒருவன் - இறைவன்

8. "காற்றால் அணைகின்ற கைவிளக்கு பலவுண்டு - இவையோ

மூச்சுக் காற்றின்றி அணையும் கண் விளக்கு" - பயின்று வரும் தொடை

A) செந்தொடை B) முரண்தொடை

C) இயைபுத் தொடை D) எதுவுமில்லை

9. கண்ணகி தெய்வத்திரு பத்தினி கோட்டம் எடுத்து சிறப்பித்தவன்

A) சேரன் செங்குட்டுவன் B) கயவாகு

C) மாமல்லன் D) வீரராஜேந்திரன்

10. "வினையாலணையும் பெயர்"-இவ்விலக்கண குறிப்புக்கு பொருந்தாதது எது?

A) அறிவான் B) வாழ்வான் C) ஒல்கார் D) ஒழுகான்

11. பொருந்தாத இணையைச் சுட்டு.

A) உரகம் - 1. பாம்பு

B) காந்தி - 2. பேரொளி

C) தடிதல் - 3. தண்டித்தல்

D) கோடிகம் - 4. ஆடை

12. "தமிழ் மாதின் இனிய உயர்நிலை" என வழங்கப்படும் நூலிலுள்ள அதிகாரங்கள்

A) 133 B) 41 C) 83 D) 94

13. பிள்ளைத்தமிழின் பாவகை, இருபாலுக்கும் பொருந்தும் பருவங்களின் எண்ணிக்கை

A) ஆசிரியப்பா B) ஆசிரிய விருத்தம்-7

C) ஆசிரியப்பா-7 D) ஆசிரிய விருத்தம்-3

14. கருத்தோவியங்களை வடிவமைக்கும் சொல்லேருழவர் யார்?

A) ந. காமராசன் B) சிற்பி பாலசுப்ரமணியம்

C) ந. கருணாநிதி D) கவிக்கோ

15. இராமன் எந்நாட்டிற்குரிய இளவரசன்

A) கோசல நாடு B) அஸ்தினாபுரம்

C) அய்யோத்தி D) காளத்தி

16. "உனக்கு பிடிக்காத ஒன்றை, நீ பிறருக்கு பிடிக்குமொன்று நினைந்து செய்யாதே"- யாருடைய கூற்று

A) சுன்ஜீ B) சித்தார்த்தர்

C) கன்பியூஷியஸ் D) இயேசு பெருமான்

17. I. சிலாசாசானங்கள் எனப்படுபவை - கல்வெட்டுக்கள்

II. மெய்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரும் முறையை முதலில் தொடங்கியவர் - முதலாம் ராஜராஜன்

A) I சரி II சரி B) I சரி II தவறு C) I,II தவறு D) I தவறு II சரி

18. சரியாக பொருந்தியுள்ளதைத் தேர்க :

A) விலாதத்து காண்டம் - 1. செம்பொருள் காண்டம்

B) நுபுவத்து காண்டம் - 2. பிறப்பியற் காண்டம்

C) ஹிஜ்ரத்து காண்டம் - 3. செல்வியற் காண்டம்

D) சின்னசீறா - 4. வுள்ளல் சீதக்காதி

19. "பாட்டாளி ஒய்வு பெறுவது சமூக நீதியில் ஒன்று, அடிப்படை நீதி" எனக் கூறியவர்

A) பேரறிஞர் அண்ணா B) மூதறிஞர் ராஜாஜி

C) முத்தமிழறிஞர் கலைஞர் D) எவருமில்லை

20. "மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று" இவ்வடி எதில் இடம்பெற்றுள்ளது.

A) புறநானூறு B) நற்றினை

C) மூதின் முல்லை D) முல்லைப்பாட்டு

21. பொருள் கூறுக. சிலை

A) வில் B) சிற்பம் C) கலை D) அம்பு

22. பொருந்தாதது எது?

A) செயல் B) பெறல் C) அடங்கல் D) ஒடுக்கம்

23. சரியானது அல்லாததைத் தேர்க:

A) துயிலா நின்ற = துயிலா+ நின்ற

B) துயிலா நின்ற = துயில்+ மாலை

C) சொல்மாலை = சொல்+ மாலை

D) கோட்டுகிர் = கோடு+ உகிர்

24. இலக்கணக் குறிப்பு கூறுக. புல்லடிமை

A) வினைத்தொகை B) உவமைத்தொகை

C) பண்புத்தொகை D) ஆகுபெயர்

25. இலக்கணக் குறிப்பு கூறுக. சிறுநுதல்

A) பண்புத்தொகை B) உவமைத்தொகை

C) அன்மொழித் தொகை D) வேற்றுமைத்தொகை

26. "நெடுங்கணாள் எழினியை நிக்கி" - அடிக்கோட்ட சொல்லின் பொருள்

A) வீணை B) நரம்பு C) உறை D) குற்றம்

27. I. தமிழ்மொழியின் உபநிடதம் எனப்போற்றப்படுவது- தாயுமானவர் பாடல்கள்

II. இதிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை- 1542

A) I சரி II தவறு B) I தவறு II சரி C) I,II சரி D) I,II தவறு

28. இரங்கற்பா எனும் நூலின் முல நூலின் ஆசிரியர்

A) கந்தசாமிப் புலவர் B) தாமஸ் கிரே

C) ந. காமராசன் D) சிற்பி

29. பாரதியார் ஆசிரியராக இருந்த வாரப் பத்திரிக்கை

A) சுதேச மித்திரன் B) இந்தியா

C) சக்கரவர்த்தினி D) பாலபாரதம்

30. "வரையா மர்பின் மாரி போலக்" - பயின்றுவரும் அணி

A) தொழிலுவமை அணி B) உவமையணி

C) வேற்றுமை அணி D) உருவக அணி

31. பொருட்சுவை மொத்தம் 9 ஆனால் காப்பியங்களில் பயின்று வருவன

A) 9 B) 8 C) 7 D) 6

32. தொல்காப்பியர் வீரம் என்பதனை எந்த சொல்லால் குறிப்பிடுகிறார்

A) தறுகண் B) பெருமிதம் C) மறம் D) இசை

33. ஐங்குறுநூற்றில் உள்ள திணைகளின் சரியான வரிசையை சுட்டு

A) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

B) மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை

C) முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை

D) மருதம், நெய்தல், பாலை, குறிஞ்சி, முல்லை

34. "இல்லாததில்லை இணையில்லை முப்பாலுக் இந்நிலத்தே"

A) பாரதிதாசன் B) பாவேந்தர் C) மகாகவி D) புரட்சிக்கவி

35. தமிழ் மாந்தர் தம் நெஞ்சில் வைத்துப் போற்றும் நூல்

A) திருக்குறள் B) சிலம்பு C) சிந்தாமணி D) மேகலை

36. கண்ணதாசன் நடத்திய இதழ்களில் அல்லாதது?

A) சண்டமாருதம் B) முல்லை

C) அர்த்தமுள்ள இந்து மதம் D) தென்றல்

37. சைவ உலகத்தின் செஞ்ஞாயிறு என போற்றப்பட்டவர்

A) ஞான சம்மந்தர் B) சுந்தரர்

C) நாவுக்கரசர் D) மாணிக்கவாசகர்

38. "புறம்புண் ணாணி வடக்கிருந் தோனே" -இவ்வரியில் வடக்கிருந்து உயிர் துறந்தவன் யார்?

A) கரிகாற் சோழன் B) கிள்ளி வளவன்

C) பெருஞ்சேரலாதன் D) சேரன் செங்குட்டுவன்

39. பாரதியின் எப்படைப்பில் இசையின்பெருமை பேசப்படுகிறது

A) சிந்துக்கவி B) பாப்பா பாட்டு

C) குயில் பாட்டு D) கண்ணன் பாட்டு

40. "சுடர்படைவாள் அபயனடி அருள் னோடும்"-இவ்வரியில் அபயன் என்றும் சொல்லால் குறிப்பிடப்படுபவன்

A) கருணாகரத் தொண்டைமான் B) கலிங்க அரசன்

C) முதலாம் குலோத்துங்கச் சோழன் D) பிராமணன்

41. இளமையிலேயே ஐம்பொறிகளையும் வென்று இன்பம் துறந்தவர்

A) ஞான சம்மந்தர் B) சுந்தரர்

C) திருநீலகண்டன் D) மெய்கண்ட சிவம்

42. பொருத்துக:

A) ஒல்கார் - 1. தளரார்

B) செறுநர் - 2. பகைவர்

C) சாகாடு - 3. ஒழுங்கு

D) கொடி - 4. வண்டி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 1 | 2 | 4 | 3 |
| C) | 1 | 4 | 2 | 3 |
| D) | 4 | 1 | 2 | 3 |

43. பொருந்தாத சொல்லைத் தேர்க

A) விரிமலர் B) எரிமலர் C) விடுகணை D) திகழ்சிரம்

44. பொருளறிந்து இணையை தேர்ந்தெடு. முந்நாள் முன்னாள்

A) முந்தைய நாள் - மூன்று நாள்

B) மூன்று நாள் - முந்தைய நாள்

C) தனக்கு முன்னால் - 3 நாள்

D) முன்னொரு நாள் - 3 நாள்

45. பொருளறிந்து பொருத்துக:

தலை-தளை-தழை

A) ஓர் உறுப்பு - விலங்கு - தழைத்தல்

B) ஓர் உறுப்பு - விலங்கு - தழைத்தல்

C) ஓர் உறுப்பு - கட்டு - புல் முதலியன

D) சிரம் - விலங்கு - செடி

46. I. வினைத் தொகையில் வல்லினம் மிகாது

II. உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்

A) I சரி II தவறு B) I தவறு II சரி C) I,II தவறு D) I, II சரி

47. அழகு - எனும் பொருள் தரும் சொல்

A) கவின் B) வனப்பு C) எழில் D) அனைத்தும்

48. மரபுப் பிழையுள்ள தொடர் எது?

A) தென்னை ஓலையால் கிற்றுப் பின்னுவார்கள்

B) அம்பு எய்து மான் கன்றை காயப்படுத்தினேன்

C) பனந்தோப்பில் ஆந்தை அலறியது

D) கஞ்சி சாப்பிட்டால் உடலுக்கு நல்லது.

49. ஒருமனம், இருவினை - ஆகியவற்றில் பயின்று வரும் பண்புத்தொகை?

A) வடிவப்பண்பு B) அளவுப்பண்பு

C) முகத்தல் பண்பு D) நீட்டல் பண்பு

50. அரை எனும் சொல்லின் பொருள்

A) இருப்பு B) வீட்டின் சிறு பகுதி

C) அறைதல் D) அனைத்தும்

51. பொருந்தாததை சுட்டுக:

A) H.A. கிருட்டிணப்பிள்ளை - கரையிருப்பு

B) திருநாவுக்கரசர் - திருவாமூர்

C) முடியரசன் - தேனிமாவட்டம் பெரியகுளம்

D) கண்ணதாசன் - சிறுகூடல் பட்டி

52. தமிழ்நாட்டின் இரசூல் கம்சதேர்வு - பாரதிதாசன் இரசூல் கம்சதோவ் எந்நாட்டினை சார்ந்தவர்?

A) பிரெஞ்சு B) ரஷ்யா C) பாரசீகம் D) இந்தியா

53. தமது மறைவின் பொழுதும் எச்சடங்குகளும் வேண்டாம் என மறுத்து அதனை நிறைவேறச் செய்தவர்

A) முடியரசன் B) கண்ணதாசன் C) ந.கருணாநிதி D) ந.காமராசன்

54. தமிழில் தோன்றிய முதல் பரணி நூல் எது?

A) கலிங்கத்துப்பரணி B) தக்காயாகப் பரணி

C) மோகவதைப் பரணீ D) தென்தமிழ் தெய்வப்பரணி

55. "காலே பரிதப்பினவே கண்ணே, "நோக்கி நோக்கி வாளிழந்தனவே" இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்

A) புறநானூறு B) நற்றிணை C) ஐங்குநுறூறு D) குறுந்தொகை

56. விருத்தம் எனும் பாவினத்தால் அமைந்த முதல் தமிழ்க் காப்பியம்

A) சிலம்பு B) மண நூல் C) தொல்காப்பியம் D) மணிமேகலை

57. "வஞ்சியே எனன்றவுன்றன் ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியா எனன்பதனால் வாய் நேர்ந்தேன்" - இவ்வடிகளில் பயின்றுவரும் தொடை?

A) அடிமோனை, அடிஎதுகை, சீா் மோனை

B) அடிமோனை, சீா்மோனை

C) அடி எதுகை மட்டும்

D) சீா்மோனை, அடி எதுகை மட்டும்

58. "செவிலித்தாய்" பொருள் தரும் சொல்லைத் தோ்க:

A) இருவிசும்பு B) கைத்தாய் C) நிலமடந்தை D) a யும் b யும்

59. கூற்று : வாட்படை என்தன் இலக்கண குறிப்பு இருபெயரெட்டு பண்புத்தொகை

காரணம்: ஒரு பொதுப்பெயா் மற்றும் ஒரு காரணப்பெயா் இரண்டிற்கும் இடையில் ஆகிய சொல்லுருபு மறைந்து வருவது இருபெயரொட்டு பண்புத்தொகை

A) கூற்று மற்றும் காரணம் தவறு B) கூற்று சரி காரணம் தவறு

C) கூற்று சரி, காரணம் சரி D) கூற்று தவறு, காரணம் சரி

60. "மடிமிசையிருந்த காந்தி மதிமுகம் அசைந்தி டாமல்" - இவ்வடி இடம் பெற்றுள்ள நூல் எது?

A) சீவக சிந்தாமணி B) மணிமேகலை

C) சீறாப்புராணம் D) சிலப்பதிகாரம்

61. கிரேக்கர்களின் பழங்காப்பியம் எது

A) வர்ஜில் B) இலியட் C) ஈனியஸ் D) அனைத்தும்

62. "பிறர் அன்பு பாராட்டாமலும் பிறர் அன்புக்கு பாத்திரமாகாமலும் இருப்பவனிடம் நற்குணங்கள் இரா- எனக் கூறியவர்

A) இயேசு பெருமான் B) முகமது நபி

C) முகமது சாகேபு D) புத்தர்

63. "பட்டோர் பெயரும் அற்றலும் எழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்" - இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்?

A) திருக்கோவை B) திருவாரூர் மும்மணிக்கோவை

C) திருவாசகம் D) திருவாரூர் நான்மணிமாலை

64. I. கல்வெட்டுகளில் முதலில் இருப்பது "ஸ்புஸ்தி ஸ்ரீ" எனும் மங்கல வாசகம்
II. இறுதியில் இருப்பது ஓம்படைக்கிளவிகள் ஆகும்

A) I, II தவறு B) I, II சரி C) I சரி II தவறு D) I மட்டும் தவறு

65. நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயத் தருளி" - இவ்வடிகளை கொண்ட நூல்

A) திருக்குறள் B) குறுந்தொகை

C) நற்றிணை D) ஐங்குநுறூறு

66. நளனை பிடித்திருந்த நீங்கியது? விடுபட்ட சொல் எது?

A) களி B) கலி C) கழி D) கடி

67. பொருளுணர்ந்து பொருத்துக:

A) கணம் - 1. தண்டி

B) அரி - 2. கூட்டம்

C) ஒறு - 3. பெருமை

D) மாண் - 4. திருமால்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 1 | 2 | 4 | 3 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 2 | 4 | 1 | 3 |

68. ஆசியாவில் பாரதத்திற்கு இணையான ஆன்மீக ஞானிகள் தோன்றிய நாடு எது?

A) கிரேக்கம் B) சீனா C) இந்தியா D) தாய்லாந்து

69. "பேயார்" என்றழைக்கப்படும் சிவனடியார் யாவர்?

A) திலகவதியார் B) புனிதவதியார்

C) காரைக்கால் அம்மையார் D) b யும் C யும்

70. கண்ணம்பனுக்கு இனிய காளத்திநாதனை முறைப்படி பூசனை செய்து வந்தவர்

A) சிவாச்சாரியார் B) மெய்கண்ட சிவம்

C) சிவகோசரியார் D) சிவனடியார்

71. பண்புத் தொகையில் பொருந்தாது எது?

A) வெண்குழை B) முதுசுருதி

C) வெண்முல்லை D) அடுதிரை

72. பொருள் கூறுக: பத்தர்

A) யாழின் ஓர் உறுப்பு B) பொற்கொல்லர் C) நரம்பு D) அனைத்தும்

73. எரிமலர் என்பதன் பொருள்

A) முருக்கமலர் B) எரிந்த மலர் C) குவளை மலர் D) ஆம்பல் பூ

74. "எரிமலர் பவளச் செவ்வாய்" - அடிகோடிட்ட சொல்லின் பொருள் யாது?

A) காந்தருவதத்தை B) சிவந்தவாய்

C) யாழின் நரம்பு D) சிவந்த உதவு

75. பொருந்தாததை தேர்க:

A) மடங்கல் - சிங்கம் B) கெந்தம் - மற்கன்

C) நறை - தேன் D) பரல் - பாறை

76. பொருந்துவதை தேர்க: "அறிகிலார்" - பகுபத உறுப்பிலக்கணம்

A) அறிகில் + ஆர் B) அறி + கில் + ஆர்

C) அறி + கில் + அல் + ஆர் D) அறுகு + ஆல் + ஆர்

77. பொருந்தாததை தேர்க:

A) ஆகாறு B) பெய்சாகாடு C) பொருதகர் D) அருவினை

78. வெந்தழற் கவரே இந்தனம் ஆகுது - அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

A) விறகு B) அடிமை C) வேலையாள் D) பகைவர்

79. "நமன்" என்னும் சொல்லின் பொருள் அல்லாதது எது?

A) காலன் B) அமென் C) கூற்றுவன் D) இந்திரன்

80. இலக்கண குறிப்பறிக: மூவாத ஞாயிறு

A) பெயரெச்சம் B) எதிர்மறை பெயரெச்சம்

C) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் D) வினையெச்சம்

81. பழந்தமிழ் இலக்கியத்தின் உயிர்சாரத்தையெல்லாம் தமது பாடல்களிலே எடுத்தாண்டவர்

A) முடியரசன் B) கண்ணதாசன் C) ந.காமராஜன் D) சுரதா

82. "ஒளிப்பறவை" எனும் நூலை ஆக்கியோன் யார்?

A) சிற்பி சுப்ரமணியம் B) சிற்பி பாலசுப்பிரமணியம்

C) ந.காமராஜன் D) முடியரசன்

83. தாயுமனவரின் ஆன்மீக குரு யார்?

A) திருமூலர் B) மௌனகுரு C) வள்ளலார் D) புலிப்பாணி

84. கீதையை முதலில் தமிழில் மொழிப்பெயர்த்தவர்

A) பாரதி B) பாரதிதாசன்

C) கண்ணதாசன் D) சுப்புரத்தினதாசன்

85. பொருத்துக:

A) பாரதி - 1. புரட்சிக்கவி

B) பாரதிதாசன் - 2. புலனழுக்கற்றி அந்தநாளன்

C) கண்ணதாசன் - 3. மகாகவி

D) கபிலர் - 4. கவியரசு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 3 | 4 | 1 | 2 |

86. திருக்குறள் - இலக்கணக் குறிப்பறிக

A) கருவியாகுபெயர் B) அடையடுத்த கருவியாகுபெயர்

C) இரண்டடி வெண்பா D) கருத்தாவாகு பெயர்

87. "கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு" - இதில் பயின்று வரும் அணி

A) வேற்றுப் பொருள் வைப்பணி B) தற்குறிப்பேற்ற அணி

C) மயக்கணி D) தொழிலுவமையணி

88. வாழ்க்கை இலக்கண குறிப்பு

A) தொழிற்பெயர் B) பண்புப்பெயர்

C) காரணப்பெயர் D) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

89. பொருந்தாததை தேர்க:

| | | |
|---|---|---|
| A) மணநூல் | - | 1. சிவகசிந்தாமணி |
| B) வாயுரை வாழ்த்து | - | 2. திருக்குறள் |
| C) முதுமொழிமாலை | - | 3. சேரமான் பெருமாள் நாயனர் |
| D) கந்தர் கலிவெண்பா | - | 4. குமரகுருபரர் |

90. தஞ்சை வேதநாயக சாத்திரியரின் ஆசிரியர் யார்

A) தேவசகாயம்

B) கடிகை முத்துப் புலவர்

C) சுவார்ட்ஸ் பாதிரியார்

D) சீகன் பால்கு ஐயர்

91. பொருந்தாததை தேர்க:

A) ஞானதச்சன் B) ஞான கூத்தன்

C) ஆரணாதிந்தம் D) ஞானஉலா

92. செங்கீரைப் பருவம் என்பது பிள்ளைத்தமிழில் எத்தனையாவது பருவம்

A) 3ம் பருவம் B) 4ம் பருவம் C) 2ம் பருவம் D) முதற்பருவம்

93. "கானருகும் வயலருகும் கழியருகும் கடலருகும்" என்று கூறும் நூல்?

A) தேவாரம் B) திருவாசகம்

C) முக்கூடற்பள்ளு D) குற்றாலக் குறவஞ்சி

94. "சகாரவை தாண்டாத ஒட்டகங்கள்" - இந்நூலின் ஆசிரியார் யார்?

A) நா. காமராசன் B) ந.கருணாநிதி

C) சிற்பி D) முடியரசன்

95. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டவர்

A) நா. காமராசன் B) ந. கருணாநிதி

C) சிற்பி D) முடியரசன்

96. "வேதம் அனைத்திற்கும் வித்து

A) திருப்பாவை B) திருவெம்பாவை

C) திருக்கோவை D) பகவத்கீதை

97. இரட்சணிய மனோகரப்பாடலின் பாவகை யாது?

A) விருத்தப்பா B) கலிவிருத்தம்

C) தாழிகை D) ஆசிரிய விருத்தம்

98. மபி - என்பதன் பொருள் கூறுக.

A) மடிந்தல் B) இறந்த C) சோம்பல் D) அனைத்தும்

99. வயமா என்பதன் பொருள் கூறுக.

A) மான் B) புள்ளிமான் C) குதிரை D) காட்டுப்பசு

100. "பாரதிநாடு பாருக்கெல்லாம் திலகம்" எனக் கூறியவர் யார்?

A) பாரதி B) நாமக்கல்கவி C) பாரதிதாசன் D) சுரதா